**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்:** 532 **நாள்:** 01.10.2026

**பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.**

**மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் அளித்த பேட்டியில் தகவல்.**

பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள், சோழிங்கநல்லூர் மண்டலத்தில் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதை இன்று (01.10.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., கண்காணிப்புப் பொறியாளர் திரு.முரளி, மண்டல அலுவலர் திரு.ஜி.லோகேஸ்வரன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

மாநகராட்சி ஆணையாளர் அவர்கள், சோழிங்கநல்லூர் மண்டலம், செம்மஞ்சேரி வீட்டு வசதி வாரிய குடியிருப்புப் பகுதிகளில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக கொசு ஒழிப்புப் புகைபரப்புதல், மக்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்குதல், விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டுப்பிரசுரங்கள் வழங்குதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், செம்மஞ்சேரி அரசன் கழனி கால்வாயில், கொசுப்புழுக்களை ஒழிக்கும் நடவடிக்கையாக டிரோன் மூலம் கொசுப்புழுக்கள் நாசினி மருந்து தெளிக்கப் படுவதைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**பின்னர், மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் செய்தியாளருக்கு அளித்த பேட்டி:**

**வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:**

இன்று சோழிங்கநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட நூக்கம்பாளையம் பகுதியில் உள்ள இந்த அரசன்கழனி கால்வாயிலிருந்து அதிகமான தண்ணீர் வழக்கமாக ஒக்கியம் மடுவு வழியாக தெற்கு பக்கிங்ஹாம் கால்வாயைச் சேர்ந்து, தெற்கு பக்கிங்ஹாம் கால்வாயிலிருந்து முட்டுக்காடு பகுதியில் இருக்கின்ற முகத்துவாரம் வழியாக வங்காள விரிகுடா கடலில் போய்ச் சேரும்.

இவ்வளவு தூரம் இந்தத் தண்ணீரைக் கொண்டு போவதின் வழியாக அந்தந்தப் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. இதற்கு ஒரு தீர்வாக இந்த நூக்கம்பாளையம் பாலத்திலிருந்து ஜெர்மன் வங்கியின் உதவியுடன் கிட்டத்தட்ட 4.60 கி.மீ. நீளமான ஒரு கால்வாய், ஒரு கட் அண்ட் கவர் (Cut and Cover) கால்வாய் அமைக்கும் திட்டம் நடைபெற்று வருகிறது.

இந்த நூக்கம்பாளையம் சாலையில் ஒரு 2 கி.மீ. ஒரு கிட்டத்தட்ட 500 மீட்டர் ஓ.எம்.ஆர். (OMR) கிராசிங், அதைத்தாண்டி டி.என்.எச்.பி. (TNHB) சாலை என்ற ஒரு சாலையையும் தாண்டி

தெற்கு பக்கிங்ஹாம் கால்வாயில் நேரடியாக இந்த அரசன்கழனி கால்வாயிலிருந்து வருகின்ற தண்ணீரைச் தெற்கு பக்கிங்ஹாம் கால்வாயில் போடும் திட்டம். அந்தத் திட்டம் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

இதில் ஓ.எம்.ஆர். பகுதியில் தான் வேலை கொஞ்சம் நிலுவையில் இருக்கிறது, அந்த வேலை முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. இன்றைக்கு அந்த இடத்தில் ஆய்வு செய்துள்ளேன். அந்தப் பகுதியில் காவல் துறை, டி.என்.ஆர்.டி.சி., சி.எம்.ஆர்.எல். அனைத்துத் துறைகளின் ஒருங்கிணைப்புடன் அந்த வேலைகள் நடைபெற்று வருகிறது.

இந்த ஜீரோ புள்ளியிலிருந்து (Zero point) ஓ.எம்.ஆர். வரைக்கும் உள்ள வேலைகள் நடைபெற்று முடிவடைந்தது. ஓ.எம்.ஆர். பகுதியில் உள்ள வேலைகள் முடிவடைந்தால் இந்தத் தண்ணீரைச் சீக்கிரமாக அங்கே கொண்டுபோய்ச் சேர்க்கலாம்.

**டெங்கு தடுப்பு நடவடிக்கைகள்:**

இன்றைக்கு நூக்கம்பாளையம் பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைக்காக ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சி இந்தச் சந்திப்பில் நடைபெற்றது. நிலவேம்பு குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது. துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டது.

அதுமட்டுமல்லாமல் ஒரு புதிய முயற்சியாக ஒரு பயோ ரெமிடியேஷன் (Bioremediation) முறை என்று சொல்லக்கூடிய, பேசிலஸ் துரிஞ்சியன்சிஸ் (Bacillus thuringiensis) என்ற ஒரு பாக்டீரியல், ஒரு லார்விசைடு (Larvicide) தான், இந்த லார்வாக்களுக்கு எதிராகச் செயல்படும் ஒரு பயோ ரெமிடியேஷன் முறையில் இன்றைக்கு ட்ரோன் மூலமாக இந்த அரசன்கழனி கால்வாயில் நாங்கள் ஒரு பரிசோதனை முறையில் கடந்த வருடம் செய்து ரொம்ப வெற்றிகரமாக கண்டறியப்பட்டதன் அடிப்படையில் இந்த வருடமும் பெருநகர சென்னை மாநகராட்சியின் பல்வேறு பகுதிகளில், நேற்றைக்கு கூவம் மற்றும் பக்கிங்ஹாம் கால்வாய் பகுதிகளில் இதைச் செய்துள்ளோம்.

இன்றைக்கு இந்த அரசன்கழனி கால்வாய் பகுதியில் ட்ரோன் மூலம் பேசிலஸ் துரிஞ்சியன்சிஸ் என்ற லார்விசைடு தெளிக்கும் வேலைகளை ஆய்வு செய்துள்ளேன்.

எனவே தொடர்ச்சியாக, இந்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. சென்னையைப் பொறுத்தவரையில் காய்ச்சல் பாதிப்புகளின் போக்கு (trend) கடந்த இரண்டு மாதமாக அதிலும் குறிப்பாக டெங்கு பாதிப்பைப் பற்றி கண்காணிக்கும் வகையில் நாங்கள் எந்த காய்ச்சல் பாதிப்பு இருந்தாலும் அது டெங்கு அல்லது ஏதேனும் பூச்சி வழியே பரவும் நோயாக (vector-borne disease) இருக்கும் என்ற முன்னெச்சரிக்கையில் அந்தப் பகுதியை ஒரு முக்கியமான பகுதியாகக் (hotspot) கண்டறிந்து முழுவீச்சில் அந்த இடத்தில் தேவையற்றப் பொருட்களை அகற்றி (source reduction) உரிய டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம்.

குறிப்பாக இந்த செப்டம்பர் மாதத்தில், கடந்த மாதத்தில் 1293 ஐ.ஜி.எம். (IgM) டெங்கு உறுதி செய்யப்பட்ட பாதிப்புகள் சென்னை மாநகரத்தில் அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகரத்தின் மக்கள் தொகை என்பது 1 கோடி மக்கள் தொகை. இதில் 1293 என்பது குறைவான எண்ணிக்கையாக இருக்கலாம், அல்லது அதிகமான எண்ணிக்கை இல்லை என்று கூடச் சொல்லலாம். இருப்பினும் இந்த 1293 பரிசோதனை செய்யப்பட்ட பாதிப்புகள். இதில் நிறையப் பாதிப்புகள் சுயமாகக் குணமடையக்கூடியவை (self-limiting). டெங்கு ஒரு சுயமாகக் குணமடையக்கூடிய வைரஸ் நோய். நமக்குத் தெரியாமலே வந்து அது தானாகச் சுயமாகக் குணமடையும். இதில் 95 சதவீதம் அப்படித்தான் சுயக் கட்டுப்பாட்டிற்குள் போனாலும், ஒரு 5 சதவீதம் டெங்கு பாதிப்புகள் சிக்கல்கள் (complications), மருத்துவமனையில் அனுமதிக்கப்பட வேண்டிய கட்டாயம் இதெல்லாம் வரும்.

எனவே அந்த 5 சதவீத பாதிப்புகளில் கவனம் செலுத்தி மக்களுக்கு விழிப்புணர்வு கொடுக்க வேண்டும். ஏதாவது காய்ச்சல் அதிகமாக இருக்கிறது, குறையவில்லை, தோலில் ஏதேனும் தடிப்புகள் (rashes) வருகிறது, ஏதேனும் ரத்தப்போக்கு (bleeding) வருகிறது என்றால் உடனடியாக மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும் என்று மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம்.

மக்கள் தங்கள் வீட்டோடு சுற்றுவட்டாரப் பகுதியைச் சுத்தமாக வைக்க வேண்டும். சின்ன சின்னக் கோப்பைகள், பிளாஸ்டிக் கோப்பைகள், டயர், கைவிடப்பட்ட டயர்கள், அதேபோல் உடைந்த சிரட்டைகள், தென்னை மரத்தின் பகுதிகள் இவை எல்லாமே சுத்தமான தண்ணீர் தேங்குவதற்கு ஒரு காரணமாக இருக்கும். அந்தச் சுத்தமான தண்ணீரில் தான் ஏடீஸ் என்ற கொசு முட்டையிட்டு அந்த லார்வா தொற்றாகி, அந்த கொசு வைரஸ் நோயைப் பரப்புகிறது. எனவே மக்களுக்கு இந்த விழிப்புணர்வும் ஏற்படுத்தி வருகிறோம்.

எந்தெந்த இடங்களில் காய்ச்சல் பாதிப்புகள் அதிகமாகிறதோ அப்பகுதிகளில் தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட 100 மருத்துவ முகாம்கள் ஒவ்வொரு நாளும் நாங்கள் இப்போது ஒருங்கிணைக்கிறோம். அதனால் மக்கள் ஏதேனும் இருந்தால் முன்னெச்சரிக்கையாக வந்து அந்த மருத்துவ முகாம்களை அணுகலாம்.

அதுமட்டுமல்லாமல் ஒரு பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணிகள், மற்ற வெள்ளத் தடுப்புப் பணிகள், மோட்டார் மற்றும் பம்ப் செட் வாங்கும் பணிகள், கால்வாய்களைத் தூர்வாரும் பணிகள். இப்போது கூட இந்தப் பகுதியில் ஒரு பெரிய கால்வாய், இந்த கால்வாய் வந்து ஒக்கியம் மடுவு வரைக்கும் தூர்வாரும் பணி நீர்வளத்துறை மூலமாகச் செய்து வருகிறோம்.

பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்து இந்தத் திட்டங்கள், இந்த முன்னேற்பாடு பணிகள் செய்து வருகிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த மாதம் இரண்டு நாள் குறிப்பாக இந்த மழைநீர் வடிகால்கள் மற்றும் வெள்ளத் தடுப்புப் பணிகளுக்கான ஒரு ஆய்வுக் கூட்டமும், டெங்கு பாதிப்பு சம்பந்தமான ஒரு ஆய்வுக் கூட்டமும் நடத்தி எங்களுக்கு அறிவுரைகளை வழங்கியுள்ளார்கள்.

இதனை முன்னிட்டு 7 அமைச்சர் பெருமக்கள் சென்னைக்கு மட்டும் சிறப்பு ஒருங்கிணைப்பாளர்களாக நியமனம் செய்து, அந்த 7 அமைச்சர்களும் தலா இரண்டிலிருந்து மூன்று மண்டலங்களைக் கண்காணித்து வருகிறார்கள்.

அதேபோல் தலைமைச் செயலாளர், கூடுதல் தலைமைச் செயலாளர் போன்ற உயர் அலுவலர்களின் ஆய்வுகள், ஆணையர், துணை ஆணையர் போன்ற அலுவலர்கள் ஒவ்வொரு இடத்திலும் நாள் வாரியாகக் காலை நேர ஆய்வுகள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன.

இந்த வருடம் எல் நினோ வருடம், மிக அதிகமான மழை பெய்யக்கூடிய ஒரு வருடமாக கருதப்படுகிறது. எனவே, மிக அதிகமான மழை வரும் பட்சத்தில் எப்படி எல்லாம் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும், எப்படி எல்லாம் பாதுகாப்பாக இருக்க வேண்டும், பொதுமக்களின் ஒத்துழைப்பு எங்கெல்லாம் தேவைப்படுகிறது, நிவாரண மையங்கள் எப்படித் தயார் செய்ய வேண்டும் என்று முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 215 நிவாரண மையங்கள் தயார் செய்து வைத்துள்ளோம். 111 பொது சமையலறைகள் தயார் செய்து வைத்துள்ளோம். அவற்றில் எல்லாம் சமையல் எரிவாயுப் பொருட்கள், கேஸ் மற்றும் எல்.பி.ஜி. வசதிகள், ஜெனரேட்டர் வசதிகள் இதெல்லாம் தயார் நிலையில் வைத்துள்ளோம். பொதுமக்களும் விழிப்போடு இருக்கிறார்கள்.

இந்த இரண்டு நடவடிக்கைகளையும் கண்காணித்துதான் நான் அடையாறு பகுதியிலிருந்து அரசன்கழனி கால்வாய் வரைக்கும் ஆய்வு நடத்தியுள்ளேன்.

**செய்தியாளர்:**

இந்த ஓ.எம்.ஆர்.-ல இந்த வடிகால் பணிகள் நடப்பதனால் சாலை வந்து தோண்டப்பட்டுருக்கு. எவ்வளவு நாள்ல முடியும்?

**மாநகராட்சி ஆணையாளர்:**

இப்ப நம்ம சொன்ன இந்த வேலையோட ஒரு பகுதி வந்து ஓ.எம்.ஆர்.-ல 560 மீட்டர் போகுது. அந்த 560 மீட்டர் செய்து முடிக்கிறதுக்கு 20 நாள் தாமதமாகும். இது இல்லாம ஓ.எம்.ஆர்.-ல இரண்டு பிரதான வேலைகள் நடைபெறுகிறது. ஒன்று சோழிங்கநல்லூர் சந்திப்பில் நம்ம நெடுஞ்சாலைத் துறை மூலமாக சோழிங்கநல்லூர் சதுப்பு நிலத்தோட அதிகப்படியான தண்ணீரை கொண்டு போறதுக்கு சோழிங்கநல்லூர் சதுப்பு நிலத்திலிருந்து பக்கிங்ஹாம் கால்வாய், தெற்கு பக்கிங்ஹாம் கால்வாய் வரைக்கும் ஒரு திட்டம்.

அதேபோல் பள்ளிக்கரணை சதுப்பு நிலத்தோட அதிகமான தண்ணீரைக் கொண்டு போறதுக்கு துரைப்பாக்கத்தைத் தாண்டி, 750 மீட்டர் துரைப்பாக்கம் சந்திப்பைத் தாண்டி பக்கிங்ஹாம் கால்வாயில் போற ஒரு திட்டம். இந்த இரண்டு திட்டங்களும் ஓ.எம்.ஆர். குறுக்குத் திட்டங்கள் தான். அதில் ஒரு திட்டம் சாலைக் குறுக்கு பணி முடிவடைந்தது. மற்றொரு திட்டப் பணி வேலைகள் நடைபெற்று வருகிறது, நெடுஞ்சாலைத் துறை மூலமாக. இன்னொரு திட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி மூலமாக நாங்க சொன்ன இந்த ஜெர்மன் வங்கியின் நிதி

உதவியுடன் செய்கின்ற இந்தத் திட்டம் நடைபெற்று வருகிறது. இதெல்லாம் ஒரு நீண்ட காலத் தீர்வாக இருக்கிற தீர்வுகள். ஆனா நாங்க அதிகபட்சம் இந்த ஒரு 15-20 நாளுக்குள் அதோட அந்த விடுபட்ட இணைப்பும் சேர்க்கப்படுவதற்கான திட்டம் போட்டு இருக்கிறோம். இரவில் தான் வேலை நடக்கிறது. இரவில் ஒரு 12 மணியிலிருந்து காலையில் 5 மணி வரைக்கும் தான் வேலை செய்றதுக்கான அவகாசம் கொடுத்திருக்கிறோம். காரணம் பெரிய போக்குவரத்துப் பகுதியாக இருக்கிறது. ஆகவே எல்லா துறைகளோடும் ஒருங்கிணைந்து இந்த மீதம் இருக்கிற 560 மீட்டரை முடிக்கிறதுக்கான திட்டம் போட்டு இருக்கிறோம்.

**செய்தியாளர்:**

நைட்னு சொல்லி இருக்கீங்க. ஆனால் பகல்லயும் வேலை நடக்குது.

**மாநகராட்சி ஆணையாளர்:**

அதாவது, சி.எம்.ஆர்.எல்.-ஓட ஒருங்கிணைந்து தான் இந்த வேலை நடக்குது. பிரதான சாலையைக் குறுக்கிட்டு செய்கிற வெட்டுதல் எல்லாமே இரவில் தான் நடக்கும். சாலையோட சேவைப் பகுதிகளிலும், இணைப்புச் சாலைகளில் இருக்கிற பகுதிகளிலும், வழி உரிமை சமரசம் செய்யாத பகுதிகளிலும் காவல் துறை எப்படி அனுமதி கொடுக்கிறார்களோ அதன் அடிப்படையில் தான் பணிகள் நடைபெறுகிறது. பிரதான வேலைகள், பிரதான இயந்திர நகர்த்தல்கள், கிரேன்கள் நகர்த்தல்கள் எல்லாமே இரவில் தான் நடக்கிறது என்று தெரிவித்தார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**